உ

வெள்ளிக் கிழமையில் குருகுலம், மாம்பாக்கம் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்

கிளை–8 துன்முகி, புரட்டாசி கங 21, 28-9-56 தளிர் 48, 49

MADRAS

## கந்தர் அலங்காரம் மெய்ப்பொருள் விளக்கம்

## பெருமான் குமாரன்

பேற்றைத் தவம் சற்றும் இல்லாத என்னைப்ர பஞ்சமென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட வா! செஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்க்ரு பாகரனே.

### செய்யுள் செய்தி:

'கந்தர் அலங்காரம், இந்தச் செய்யுளை முதலாகக் கொண்டு. தொடங்குகின்றது இத் தொடக்கம்: உண்மையும் உண்மையோடு வியப்பும் வாய்ந்துள்ளது.

இறைவன் திருவருளைக் கூடுதலே 'பேறு' என்றும், அப்பேறு பெறுந் தவமுடையோர் உலகப் பற்று என்னும் சேற்றிலிருந்து நீங்கி உயர்வர் என்றும் வருவன உண்மைகள்.

அருணகிரியார்க்கு இவ்வகையில் ஒரு வியப்பு! பேரின்பப் பேறு பெறுதற்குத் தவம் செய்திருக்கவேண்டுமே! தவம் என்பதே இன்னதென்றறியாத தமக்கு, உலகப் பற்றிலிருந்து நீங்குகின்ற நிலைமையை இறைவன் எவ்வாறு அளித்தான்? இது வியப்பிலும் வியப்பாய் உள்ளதே! ஒருகால், முருகற்கு இயல்பாயுள்ள இரக்கந்தான் இதற்குக் காரணமாயிருக்குமோ' என்பது

பின்னர், அதற்கோர் அமைதியையும் அப் பெரியார் அமைத்துக் கொள்கின்றார். 'இருக்கலாம்; கங்கையும் பாம்பும் கொன்றையும் தும்பையும் பிறையும் அணிந்து இரக்கத்தால் உலகுக்கு ஐந்தொழில் இயற்றும் சிவபிரானுக்குப் புதல்வன் முருகன்! தந்தையின் பண்பு மைந்தற்கும் இருத்தல் இயல்பே! இல்லாவிட்டால், வீடுபேற்றின் பொருட்டுச் செய்ய வேண்டிய தவம் சிறிதுகூட இல்லாத என்னை, உலகமென்னுஞ் சேற்றிலிருந்து நீங்க வழி செய்தமைதான் எவ்வாறு நிகழும்?' அவர் அடைந்த அமைதி இது.

'அலங்காரம்' என்பது பேரின்ப எழிலை உணர்த்தும் நூல்: வீடுபேற்றின் இயல்பை விளக்குவதோடு, நன்கு கற்றுணர்ந்து அன்பால் ஓதுவார்க்கு அவ் வீடுபேற்றை வழங்கும் நூல்; உலகப் பற்றிலிருந்து நீக்கி உய்விக்கும் நூல். இந்தக் கருத்துகளுக் கேற்ற முதன்மை தோன்ற, முதற் பாட்டின் முதற்சொல் 'பேறு' என நின்றது. இந்நூல் இவ் வீடுபேற்று வெற்றியைத் தருமென்னும் அடையாளமாகத்தான் காப்புச் செய்யுளின் முதலிலும் 'அடல்' என்னும் வெற்றிச் சொல் வந்தது.

### மொழிப் பிரிப்பு:

ப்ரபஞ்சம் என்னும்; வழிவிட்டவாறு என்னே சடை அடவிமேல்.

(2–ம் பக்கம் பார்க்க)

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | ரூ. | 0 1 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 0 0 |

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் (அஞ்சல்)
செங்கற்பட்டு மாவட்டம்,
தமிழ் நாடு.


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.


| கிளை | துன்முகி புரட்டாசி | தளிர் |
|---|---|---|
| 8 | 28-9-56 | 49 |


## எண்ணிப் பாருங்கள்

1. குடியாட்சி பெற்றுள்ள மக்கள் தம் நாட்டு மொழி, கலை, பொருள், நாகரிகங்களுக்கே முதன்மை தரவேண்டும். மேலுமேலும் நலமுள்ள வகையில் மேன்மையாக்கிக் கொள்ள வேண்டும்.

2. பிற நாட்டு மொழி கலை பொருள் நாகரிகங்களின் மேல் உண்டாகும் வேட்கைகளை — அவை, தம் கீழ் நிலைக்குச் சான்றாயிருத்தலின் — படிப்படியாய்க் குறைத்துக் கொள்ள வேண்டும்.

3. பிற நாட்டு மொழி முதலியவற்றில் நலமுள்ள பகுதிகளைப் பயன் கொள்ளுதல் நன்றேயாயினும், தம் நாட்டு மொழி முதலியவற்றிற்கு இடையூறு இல்லாத வகையிலும், ஆக்கந்தரும் வகையிலும் பயன்படுவதாயிருந்தால் மட்டுமே—அதுவும் தேவைக்கு மேல் சிறிதும் மேல் விழாத வகையில் — அளவுடன் கையாளலாமல்லது, கண்ணை மூடிக்கொண்டு மேற்கொள்ளலாகாது.

4. பல வகையான விளம்பரங்கள், தெருப் பெயர் ஊர்ப் பெயர் மக்கள் பெயர்கள், கடிதங்கள் கட்டுரைகள் கணக்குகள், அழைப்பிதழ்கள் அறிவிப்புகள், பாட நூல்கள் அறிவு நூல்கள், நாள் கிழமை திங்கள் இதழ்கள், வாய்மொழிகள் முதலியவற்றிலெல்லாம், இம்முறையிற் கருத்தாயிருப்பது ஆட்சியுரிமை பெற்ற மக்களுக்குப் பெருங் கடமையாகும். ஏனென்றால், இவையெல்லாம் மக்களின் நினைவு சொல் செய்கைகளைப் படிப்படியாய் மாற்றி வருங் கருவிகள்!

5. எழுத்துப்பிழை கருத்துப்பிழை இல்லாமலும், கொள்கைப் பிழை உரிமைப் பிழை உண்டாகாமலும், அழகின்மை அறிவின்மை அன்பின்மை அருளின்மை நேராமலும் இவற்றிலெல்லாம் கருத்துடன் செயல் புரிந்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும். தக்கோர் இணக்கமே இதற்கு மருந்து.

—ஆடலரசு.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### சொற் பொருள்:

கழிய – நீங்க; வழிவிட்டவா– வழி செய்தவாறு என்ன வியப்பு! சடை அடவி – சடையாகிய காட்டின்; பணி – பாம்பு. இதழி– கொன்றைமலர். அம்புலியின் கீறு – நிலவின் பிளவு. க்ருபை ஆகரன் – இரக்க உருவினன்.

### பொருள் முடிப்பு:

பெருமானுக்குக் குமாரனை கிருபாகரனே! பேற்றுக்குத் தவமில்லாத என்னைச் சேற்றைக் கழிய வழிவிட்டவாறு என்னே!

### பொழிப்புரை:

சிவந்த சடையாகிய காட்டில் கங்கையும் பாம்பும் கொன்றையும் தும்பையும் நிலவின் பிறையும் அணிந்த சிவபெருமானுக்குப் புதல்வனாகிய அருள் உருவினனே! அருட்பேற்றுக்குத் தவம் சிறிதுமில்லாத என்னை உலகமென்னுஞ் சேற்றிலிருந்து நீங்க வழிசெய்த மாட்சிதான் என்னே! (நீ அருள் வடிவினனாதலின் அவ்வாறு செய்தனை போலும்!)

### உரைக் குறிப்பு:

பேற்றை – பேற்றுக்கு; வீடுபேற்றுக்குரிய: வீடுபேறு;பெறுதற்குச் செய்திருக்க வேண்டிய சேற்றை – சேற்றிலிருந்து.

(7-ம் பக்கம் பார்க்க)

# குருகுலச் செய்தி

## நடக்க இருப்பன:

ஆசிரியர் இளவழகனார் அவர்கள் விரிவுரை நிகழ்ச்சிகள்:

23–9–56 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு:
இடம்: சென்னை சென்ன மல்லிகேஸ்வரர்கோயில்
"பெரிய புராணம்"

24–9–56 திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு:
இடம்: சென்னை தொண்டைமண்டலப் பள்ளி.
"சிவஞான சித்தியார்"

28–9–56 வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு:
இடம்: திருக்கழுக்குன்றம் தாழக் கோயில்.
"5ந்தாம் திருமுறை"

## குருகுலம் உயர் தொடக்கப் பாடசாலை:

மாணவர் சங்கம்:

26–9–56 புதன்கிழமை, மாலை 3-30 மணிக்கு பாடசாலை தலைமையாசிரியர் திரு. T. V. மாணிக்கவாசகம் அவர்கள் தலைமையில், மாணவர்கள் "பொருட்செல்வம் - கல்விச் செல்வம்" ஒப்பிடுதல் பற்றிப் பேசுவார்கள்.

## குருகுல மாணவர் இல்லம்:

குருகுல மாணவர் இல்லத்திலிருக்கும் மாணவர்கள், அண்மையில் வரப்போகும் குருகுல ஆண்டுவிழாவிற்காகத் தங்கள் ஓய்வு காலத்தை வீணாக்காமல் பள்ளியை யடுத்துள்ள தோட்டத்தினை அழகுபடுத்தும் வேலை செய்கிறார்கள்.

## திருவள்ளுவர் நினைவு நாள்.

ஆரணிக் கடுத்த போளூர் போர்டு உயர்நிலைபள்ளியின் மாணவர் சங்கத்தின் சார்பில் பிரபல பாரத பிரசங்க வித்வபூஷணம் புரசை முருகேச முதலியார் தலைமையில் திருவள்ளுவர் நினைவுநாள் கொண்டாடப்பட்டது. தலைமை ஆசிரியர் ஸ்ரீ த. ப கோபாலகிருஷ்ண நாயுடு அனைவரையும் வரவேற்றார். ஆசிரியர் முத்துகிருஷ்ணன் தாம் இயற்றிய திருக்குறள் இசைமலர் என்னும் புத்தகத்திலிருந்து சில இனிய பாடல்களைப் பாடினார். கே. ஜெகன்னாததன் திருக்குறளைப்பறறிய சில பாடல்களைப் பாடி விளக்க உரை நிகழ்த்திய பின்னர் வித்வான் ஏ. சந்திரசேகரப் பிள்ளை நன்றி கூறினார்.

பெரிய புராண விரிவுரையில்

## சிந்திய கருத்துக்கள்

(மயிலை இராமலிங்கம்)

இறைவனை அடியார்களின் வாயிலாகத்தான் நன்கு காண முடியும். ஆதலின் இறை காட்சியோடு அடியார்க் காட்சியும் வேண்டுவது தக்கது.

* * * *

திருவெண்ணெய் நல்லூர் ஞானசிறப்புக்குச் சிறந்த தலம். காஞ்சிபுரம் 64 அறச் சிறப்பிலும், திருவொற்றியூர் தெய்வத்தோடு ஒன்றும் சிறப்பிலும், திருமயிலை சித்திச் சிறப்பினும் பெருமை வாய்ந்தன. ஆதலின் ஒவ்வொரு கோயிலும் அதன தன் சிறப்பில் ஆழ்ந்து உணர்தல் கடமை.

* * * *

தெய்வம், தெளிவிலும் குணத்திலும் பதியும். தெய்வம் பதியாத உள்ளம் அறியாமை இருள் சூழ்ந்து பயம் திகைப்பு கலக்கம் முதலியவற்றிற்கு இடமாயிருக்கும்.

* * * *

உயிர்களின் அஞ்ஞான இருளில் இறைவன் இயங்குவதால் கர்ப்பகிரகம் அதிக ஒளியின்றிச் சற்று இருள் வண்ணமாய் இருக்கும். இருளில் ஆண்டவன் ஒளியுடன் விளங்குகின்றான். ஆதலின் நாமும் அறியாமை மக்களிடம் பணிபுரிதல் வேண்டும். இது இறைவணக்கமே யாகும். சான்றோர் கூடப் பணிகள் புரிந்தே ஞானமடைந்து உயர்ந்தனர்.

* * * *

ஆண்டவனுக்கு ஓய்வுமில்லை; உறக்கமுமில்லை. ஆண்டவனைப் போலப் பணிபுரிகிறவர் ஒருவருமில்லை. அருள் வடிவாக உள்ள கடவுளின் பணிகளெல்லாம் கைம்மாறு கருதாதன.

பயன் கருதாப் பணி செய்வோரே கடவுள் தன்மைபெற்றவராவர்.

# அலைஓய்ந்து தலைமுழுகுவது இயற்கை யல்லவே

கடலில் அலை ஓய்ந்தபின் தலைமுழுகுவோம் என்று ஒருவன் காத்திருப்பானானால் அவனது அறியாமையை நோக்கி எல்லாரும் இரங்குவரேயல்லாது மகிழ்வரோ! நீந்தத் தெரிந்தபின் நீரில் இறங்குவோம் என்று ஒருவன் காத்திருந்தானானால் அவன் எந்த நாளிலாயினும் நீரில் இறங்குவனோ! அல்லல் மிகுந்த இவ்வுலகில் ஒரு நன்முயற்சியைச் செய்ய விரும்பும் நல்லோன், தனக்கு எல்லா வசதிகளும் ஒருங்கமைந்தபின் அதனைச் செய்யலாமென்று எண்ணமிட்டுக்கொண்டிருப்பானானால், அவன் எந்த நாளிலும் அந் நன்முயற்சியைச் செய்து முடிக்க மாட்டுவானல்லன்.

தமிழகம் இப்போது உள்ள நிலைமையில், தமிழ்மக்களின் முன்னேற்றத்துக்குத் தொண்டுபுரிய வேண்டுமென்னும் நல்லெண்ணமுள்ள மேன்மக்கள், தமிழகத்தின் ஆதரவை முதலில் எதிர்நோக்கிக்கொண்டு அதற்காகக் காத்திருந்தால், அந் நன்முயற்சி விரைவில் ஈடேறிப் பெரும்பயனை நல்காது:நல்காது. உள்ளங் கவர்ந்து எழுந்து ஓங்கும் உண்மையென்னும் உந்துதலால் தம் உடல் பொருள் ஆவியென எல்லாந் தாமே அவ்வுண்மையின் வயமாய்ப் போக, அதனால் வேறு ஏதும் மனத்திற்கிடனின்றி அம்முனைப்பே முனைப்பாய் ஒரு துறையில் துணிந்து இறங்குதலே முயற்சியை மேவும் ஒருவர்பாற் காணப்படும் இயற்கையாகும். இவரே தொண்டரெனப் படுவார்; இவர் செய்யும் நன்முயற்சிகளெல்லாம் பிற நினைவுகளாற் கவரப்படாமல் ஒரே நினைவாகக் கருத்தாய்ச் செய்யப்படுதலின், கட்டாயம் அவை கடைபோய் முற்றுப் பெறும்; நல்ல பயனுந் தரும்: தமிழ்மக்களின் அறிவு முன்னேற்றத்திற் கருத்துடையவரென்றால், அவர் உடனே வேறெதனையும் நினைந்து நினைந்து பின்னிடாமல் துணிவாய் முன்வந்திறங்கித் தொண்டுபுரிதல்வேண்டும்!

ஆதரவு பெறுவது நமது நோக்கமன்று; தொண்டுபுரிவதே நமது நோக்கம்; நோக்கத்தையே குறிக்கொண்டுழைத்தால், அந் நோக்கத்தை நிறைவேற்றுங் கருவியாகிய ஆதரவு, அவரவர் உண்மைக்கு ஏற்பத் திருவருளால் தாமே எவ்வாறேனும் அமைந்துவரும். முதலில் ஆதரவுக்கு முயல்வது முயற்சியாளர் இயல்பன்று;

மின் ஆற்றல். ஒலியெழுதி படக்காட்சி முதலிய அரும்பெரு நுண்ணியல் வினைகளையெல்லாம் எல்லாரும் வியந்தெண்ணுமாறு செய்து முடித்த பெருமுயற்சியாளரான எடிசன் என்னுந் துரைமகனார், தமது இத்தனை பெரிய நன் முயற்சியை நிறைவேற்றுதற்காக முதலில ஆதரவை நாடினாரல்லர்; தமது எண்ணத்தின் வழியே உள்ளம் ஈர்ப்புண்டு முயற்சியின் வயமாய் எழுச்சி பெற்று நிற்ப, அவர் வேறு எதனையும் முதன்மையாய் எண்ணாமற், பிறர் பகரும் இகழுரைகளையுங் கருதிப்பாராமல், தம் அருமைப் பெற்றோரும் செலவுக்கில்லாமல் இடர்ப்பட்டு நிற்றலைப் பார்த்துப் பார்த்துப் பொறுத்துக்கொண்டேனும், வெறுங் குப்பைகூளங்களே யென்று பிறரெல்லாம் ஏளனமாய் எண்ணிவந்த சிறு சிறு இயற்கைப் பண்டங்களை யெல்லாம் ஒழுங்கு சேகரித்து வைத்துக்கொண்டு, அவற்றின்கண் உள்ள இயற்கையான ஆற்றல்கள் என்னென்னவென்று எந்நேரமும் உற்றுற்று நோக்கி ஆராய்ந்து வருதலான அரிய தொண்டிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து பல்கால் உழைத்து வந்தார்; பின்னர் இவரது நுண்மான் நுழைபுல வன்மையாற் சில அரிய இயற்கையாற்றல்கள் புறத்தே உலகவர்க்கு வெளிப்பட வெளிப்பட இவர்க்குத் தக்க ஆதரவுகள் கிடைத்தன. அவ்வாதரவுகள் கொண்டு அவர் மேன்மேல் முயன்று மேலும் பலப் பல புதுமைகள் கண்டுணர்ந்து உலகுக்கு உதவ உதவ அவருக்கு மேன் மேல் ஆக்கங்களும் வசதிகளுந் தாமே அமைந்து வரலாயின; முதலில் துன்பத்துக் கஞ்சி வாளா மனம் மடிந்திருந்து பின்னால் இவருக்கு வந்த பெருத்த ஆக்கமும் நிலைத்த புகழுங் கண்டு இதற்குரிய காரணத்தை நினைத்துப் பார்க்கும் பிறர்க்கெல்லாந் தமது முன் நிலைமை ஏமாற்றமுடையதென்று புலனாகாமற் போகாது.

அறிவின் முயற்சிக்கு எதிராக வருந் துன்பங்கட்கு அஞ்சுவார் உலகில் ஆண்மையுடையராகார்! உலகத்திலுள்ள வரையிலும் அவர் எந்தநிலையிலுள்ளாராயினும் அவரை ஏதானுந் துன்பங்கள் அலைத்து வருவதே இயற்கையாதலால், எந் நிலையிலும் உள்ள இத்துன்பத்திற் கஞ்சி உரிய நன்முயற்சிகளை மேற்கொள்ளாது வாளா மடிந்து கிடப்பாரினும் பேதையர் இப்பேருலகில் பிறருளரோ சொல்லுமின்கள்! அலை நீரில் துணிந்து வீழ்ந்து தலைமுழுகுவோர்க்கு முதலில் அவ் வலைகள் இடர் செய்வனபோல் உணரப்

பட்டாலும், மேலுந் தொடர்ந்து முழுகிவருவார்க்கு அவ்வலைகளின் அலைப்புகளே ஓர் இன்பமாய்த் தோன்றுதலும் இயற்கையாகும்; அங்ஙனமே இடைவிடாமல் முயற்சியின்மேல் தொடர்ந்து செல்வார்க்கு முதலில் துன்பமாயிருந்த நிலைகளெல்லாம் ஓர் இன்பமாகவே தோன்றுதல் திண்ணம்; முயற்சியுடையார் முன்னுந் துன்பம் எதிர்நிற்குமோ? வேண்டுவது, முதலில் ஆதரவை எதிர்பாராத் துணிவுள்ளமேயாகும்; முயற்சியில் உண்மையுள்ளவர்களுக்கு ஆதரவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவருள்ளம் சும்மா இராமல் தனது கடமையை இயன்றஅளவும் செய்தே தீரும்;

இனி, அமெரிக்க நீகிரோவருக்கு வீட்டுலகமே அளித்தது போன்ற பெரு நிலையை வருவித்துக்கொடுத்த பெரு முயற்சியாளரான புக்கர் வாஷிங்டன் என்னும் நீகிரோ வகுப்புப் பெருமகனுருந் தமது இத்தனை பெரிய முயற்சிக்கு முதலில் ஆதரவை நாடினரல்லர். முதலில் அவர், தம்மைக் கல்வி நலங்களில்மேம்படுத்திக் கொள்வதற்கு உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாமல் நூற்றுக் கணக்கான கல் தொலைவு காடுஞ் செடியுங் கடும்புனலும் மேடும் மடுவும் வெறுமணலும் பருக்கைக் கற்களும் நெருக்கு முட்களுமான அருநெறிகளையெல்லாம் நடந்தே கடந்து ஓய்வு நேரங்களில் தொழில்புரிந்து கல்வி கற்றார்: கற்றபின், ''தாமின்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்'' என்னும் மெய்யுரைப்படி தம் நீகிரோ வகுப்புப் பிள்ளைகளைக் கல்வியறிவில் முன்னேற்றுவித்தற்கு உறுதிகொண்டு, உண்மைக்குப் பழுதில்லையாதலால் எப்படியும் ஆதரவுகள் கிடைக்கும் என்னுந் துணிவுடன் அப்போதுந் தொழில் முறையிலேயே பொதுச் செலவுக்கு வருவாய் தேடியபடியாய் ஒரு கல்லூரி வைத்து நடத்தி இயன்றவரையில் அப்பிள்ளைகட்குக் கலையறிவுக்கண் திறப்பித்து வந்தார்; இதுவரையில் அவர் இப்பொது நலத் தொண்டினுல் அடைந்த துன்பங்களை வாய்விட்டுச் சொல்லல் ஏலாது; அவர் இவ்வளவுக்குச் செய்து வரும்போது எதிர்பாரா ஆதரவுகளெல்லாம் பின்னர் அவருக்குக் கிட்டின; இதுவே உலகியல்பு; அதன்பின் இவ்வாதரவுகள் கொண்டு அவர் மேன்மேல் முயற்சிகளைச் செய்து முடித்தார். முயற்சியே கண்ணுயிருப்பவர்கட்கு உள்ளத்தே ஊறும் உண்மையென்னும் மகிழ்ச்சியினுல் அந் நேரத்தில் வருந் துன்பங்களுந் துன்பமாகத் தோன்றுவதில்லை; பின்னரும், பிறர்க்குந் தமக்கும் ''பேரா ஒழியாப் பிரிவிலா மறவா நினையா அளவிலா மாளா இன்பமாகடலாய்'' முடிகின்றன! வாஷிங்டன் என்னும் நீக்கிரோவர் தலைவரால் அம் மரபில் வரும் எத்தனை மக்கள் இன்புறுகின்றனர்; எடிசன் என்னும் நுண்ணியலாராய்ச்சியாளரால் ஆ, உலகமுழுவதும் என்றும் இன்புறுகின்றதே! இவ் வளப்பரும் இன்பங்களின்முன் முதலில் இடர்போலப் பிறரால் எண்ணப்படும் ஒரு சிறு துன்பம் எவ்வளவினது? இம் முயற்சியாளரல்லாத பிறரெல்லாம் பின்வரும் இவ்வின்பஞ் சிறிதுமின்றி எந்நாளும் ஏதானுந் துன்பங்களில் உழன்றபடியேயிருந்து வாளா வெற்றுடம்பாய் மாய்ந்தொழிகின்றனரே, அதற்கென் செய்வது? ஆதலால், முயற்சியுடையாரே உலகில் தலைமையுடையாரென்பதுணர்ந்து தமிழக முன்னேற்றத்திற் கருத்துடையாரெல்லாருந் துணிந்து முன்வந்து தொண்டுசெய்யுங் கடமையுடையராயிருக்கின்றனர்!

இனி இங்ஙனமே நமதரிய தமிழகத்திலும் பண்டைக் காலங்களில் திருத்தொண்டராய் விளங்கியவர்களெல்லாரும் முதலில் ஆதரவை நாடித் தம் நன்முயற்சிகளைத் தொடங்கினவர் அல்லர். பாண்டிநாடு முழுமையும் சமணசமயம் பரவியிருந்த ஞான்று அந் நாட்டில் அரசன் தேவியாரான மங்கையர்க்கரசியார்மட்டும் சைவசமயந் தழீஇயவராய்த் திகழ்ந்தார். குலச்சிறையார் என்னும் முதல் அமைச்சர் அம்மையார்க்கு உறுதுணையாயிருந்தார்; இவ் விருவர் நீங்கலாக ஏனையெல்லாரும் அரசன் கூன்பாண்டியனும் உட்படச் சமண்குருமார்வழி நின்றனர்; இந்நிலையில் அரசியார் தம் அமைச்சரோடு சூழ்ந்து சூழ்ந்து பண்டுபோல் தமது நாட்டிற் சைவசமயத்தைப் பரவவைத்தலிற் கருத்தூன்றி முயன்றுவந்தார்; இதற்காக இவர் அரசன் ஆதரவையேனும் பிறருதவியையேனும் முதலில் நாடினரல்லர்; முழுதுந் திருவருளை நம்பியவராய், அஞ்ஞான்று நாடெங்குஞ் சைவவொளி பரப்பும் பேரருளாளராய்த் திகழ்ந்த திருஞான சம்பந்தப் பிள்ளையாரையும் அரசியார் மதுரைக்குத் துணிந்துவரவழைத்துவிட்டார்; துணிந்து இங்ஙனம் முயன்றபின், அப்புறம் அரசன் ஆதரவுகள் தாமே அமைந்துவர, அதன்பின் பாண்டி நாடெங்குஞ் சைவ நீற்றொளியைப் பரவவைத்துத் தமது கருத்தை நிறைவேற்றினர் தேவியார்.

இவ்வளவு ஏன்? அணுக்க காலத்தில் தமிழக வாழ்வுக்கே தமது வாழ்வை ஈந்துதவிய தமிழ் வள்ளலாரான ஆறுமுக நாவலர் முதலான பெரியோர்களும் ஆதரவை எதிர் பார்த்துத் தொண்டு புரிந்தவரல்லரே! தொண்டன்றே இவர்கட்கு முதல் நோக்கமாய்த் திகழ்ந்தது!

ஆதலால், ஆதர விருக்கின்றதோ, ஆதரவில்லையோ, அவற்றை யெல்லாங் கருதாமல், தமிழ் மக்களின் கலையறிவு முன்னேற்றத்துக்குத் தமிழ்த் தொண்டர்கள் தந்நலம் மறுத்துத் துணிந்து முன்வந் துழைத்துத் தமக்குந் தமிழகத்துக்கும் நலம் விளைத்தலே செயற்பாலதாகும்.

பேராசிரியரும் தவநிலையாளரும் தலைவருமான ஒரு பெரியாரைச் சூழ்ந்து அவரைப் பின்பற்றி நலம் பெறும் மாணவர் சூழலே 'குருகுலம்' எனப்பெறும். அத்தகைய நலம் அமைந்தது இக்குருகுலம். இணையற்றுத் திகழும் உலகப் பொதுமறையாகிய திருவள்ளுவரின் வழியில் நிகழும் மேன்மை மிக்கது இது. வாழ்க்கைத் தூய்மையும் மன்பதைப் பணியும் அருள் ஒருமையும் குறிக்கோளாக உடையது. குருகுலத்தில் உள்ளாரை இளம் பருவத்திலிருந்தே இந்த அடிப்படையிலும் இதற்குரிய திறமையிலும் தொடர்பாகப் பழக்கி வரும் உறுதியுடையது. தகுதியுடையார் ஒவ்வொருவரும் மொழிப் புலமை, தனிக் கல்வி, தொழிற் பழக்கம், சமயப் பயிற்சி, உயிர்த்தொண்டு என்பன பெறுதற்கு இது முயன்று வருகின்றது. அப்படியே, அனைவரும் உடல் உரமட்டு மன்றி, மனநலம் அறிவு வளம் உயிரிரக்கம் திருவருள் என்பனவும் பெறுதற்கு, இது துணை புரிகின்றது. சாதி சமயம் தீண்டாமை முதலிய வேறுபாடு கருதாது, அனைவரும் 'மனித இனம்' என்னுங் கண்ணுடன் உறவு கலந்து அளவளாவுகின்றது. கடந்த 5000 ஆண்டுகட்கு மேலாக உலகின் பல பாகங்களிலும் சான்றோர் கருத்துகளுக்கும் இக்காலப் பெரியோர், கருத்துகளுக்கும் ஏற்ப, புதுமை நலந்தழுவி, இக்குருகுலம் பயிற்சி நெறி வகுத்துக் கொண்டிருக்கின்றது. ஆரவாரமின்றி, உருவான ஆக்கப் பணிகளிலேயே இது, கருத்து வைத்து நடக்கின்றது இவ்வகைகளில், இது, இருமை வகையுந் தெரிந்து ஈண்டு அறம் பூண்டு விளங்கும் ஒரு தனிச் சிறப்பான குருகுலமாய்த் திகழ்ந்து வருகின்றது.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் இங்ஙனம் எதனையுங் கருதிப் பாராமல் தமிழ்த் தொண்டாற்றுதற்குத் துணிந்து முன்வருந் தமிழ் வீரர்களும் இப்போது தமிழகத்தில் உளரோ? உளராயின் திருவருளை நம்பி வெளிவருக! வெளிவருக!! ஏனையோரையும் வெளிவருமாறு அறைகூவுக! அறைகூவுக!!

* *

## ஆசிரியர்க்கு வரும் கடிதங்களுள் சில:

அருள்ஞானத் திருவுடையீர்!

வணக்கம்.

அப்பர் 'கூற்றாயினவாறு' என்னும் பாடலில், ஏற்றாய் என்ற சொல்லுக்குச் சிலர் 'ஏற்றுக் கொண்டாய்' எனப் பொருள் கூறுகின்றனர்; அச்சொல்லுக்கு மேற் கண்டவாறு பொருள் கொண்டால், அஃது அப்பாடலின் கருத்துக் கோவைக்குப் (ஒருவாறு நோக்கின்) பொருத்த மின்றிக் காணப்படுகின்றதே என ஐயங் கொண்டேன்.

ஆனால், சென்றவாரம் சென்னையில் தங்கள் சொற்பொழிவைக் கேட்டபோது (ஏற்றாய்—ஏறு—ஆய் என விளங்கி) அவ்வையம் நீங்கி மகிழ்ச்சி கொண்டேன்.

இன்னும், சொற்றுணை வேதியன் என்ற பாடல், அவரின் வரலாற்றுக் குறிப்பமைந்த பாடல் என்று மட்டுமே இதுவரை தெரிந்திருந்தேன்; தங்கள் சொற்பொழிவின் மூலம், அது சரித்திரக் குறிப்புமட்டு மன்று, தத்துவ விளக்கத்தையும் உள்ளடக்கிய பாடல் (கல்—ஆணவம். கடல்—மாயை, கயிறு—கன்மம்) என்பதையும் அறிந்து மகிழ்ந்தேன்.

அடியேன் எதையும் ஓர் குறிக்கோளுடனும்—இலட்சியத்துடனும் கற்க விழைபவனாதலால், தங்கள் சொற்பொழிவு அடியேனுக்கு அளவில் பயன் அருளுவதாக அமைகின்றது.

வணக்கம்,

அடியேன்,

**வே. ந. நாராயணன்.**
செயலாளன்,
தத்பர சிவானந்த சபை,
சென்னை.

## மணித் திரள்

உண்ணும் வகையறிந்து உண்ணுதலும், உண்டபின் நூறடி உலாவுதலும். பகலிலே நித்திரை செய்யாமையும், வாரந்தோறும் எண்ணெய் இட்டுத் தலை முழுகுதலும் உளவாயின் உடம்பிலே நோய் உண்டாகாது.

நீ செய்த குற்றங்களை நீயே உணர்ந்து, வெளிப்படுத்தி வருத்தப்படுவாயானால், அறிவினால் மூத்த பெரியோர்கள் உன்மேல் இரங்கி, அவைகளைப் பொறுத்துக் கொள்வார்கள்.

# ஐயந் தெளிதல்

## (குருகுல மாணவர் - முத்துசாமி கேட்டவை)

1 **கேள்வி:** மக்கள் கொலை செய்தால் தீவினை சேரும் என்று சாத்திரம் கூறுகிறது. சிற்றுயிர்கள் ஒன்றிற் கொன்று கொலை செய்கின்றனவே; அவைகளுக்கு நினைத்துப் பார்த்துச் செய்யத் தெரியாதே. அவைகளையும் தீவினை சேருமா?

**விடை:** சிற்றுயிர்கள் நினைத்துப் பார்த்துச்செய்ய அறியாமையால், தீவினை அவ்வளவாக அவற்றிற்குச் சேராது; ஆயினும், சிறிதேனும்நினைவு அவற்றிற்கு இருத்தலின், தீவினை அதற்கேற்றபடி கூடும்.

2. **கேள்வி:** தொல்காப்பியம் என்பதைப் 'பழைய காவியம்' என்ற பொருளில் வந்த பெயராய்க் கொள்ளலாமா?

**விடை:** 'தொல்காப்பியக்குடி' என்பது குடிப்பெயர், அதனில் தோன்றியவர் தொல்காப்பியர். அவர் இயற்றியது தொல்காப்பியம்.

3. **கேள்வி:** 'கலிங்கத்துப்பரணி' என்னும் நூலில் பேய்கள் ஒன்றிற்கொன்று பேசுவது போல் கூறப்பட்டிருக்கின்றதே பேசுமா?

**விடை:** பேய்கள் பேசும்; ஆவி வடிவில் உயிர்களுக்கு அவை பேய்களாயினும் தேவராயினும், வாக்கு உண்டு.

4. **கேள்வி:** இந்தி மொழி பரவுவதால் தமிழ் வளர்ச்சி கெடுமா?

**விடை:** பிறமொழிகள் பரவுவதால் நன்மை உண்டாவதும் தீமை உண்டாவதும் அவற்றைப் பரவ வைப்போர் பயில்வோர் எண்ணங்களைப் பொறுத்தவை

5. **கேள்வி:** தமிழ் மொழி ஆட்சி மொழி யாவதற்குரிய கிளர்ச்சி குருகுலத்தில் செய்யப்படுமா?

**விடை:** தமிழ் மொழி ஆட்சி மொழியாதல், உரிமை பெறுந் தமிழகத்துக்கு வாய்ப்பதியல்பு.

6. **கேள்வி:** தமிழ் நாடு தனித்துத் தன்னாட்சிபெற வேண்டுமென்ற செய்கை குருகுலத்திற் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதா?

**விடை:** இந்தியா, எஞ்சியுள்ள பண்டைத் தமிழகம்; அது துண்டாடப் படுதலைக் குருகுலம் விரும்பவில்லை.

* * * *

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53. கிடங்குத் தெரு.. சென்னை 1.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

வழிவிட்டவா - வழிவிட்ட வாறு; வழிவிட்டவாறு என்னே: வழிவிட்டவாறு என்ன வியப்பு! வழிவிட்டவாறு - அருள் வழி செய்த வகை

சடாடவி - சடைக்காடு; சடைமிகுதி; காடு என்றது மிகுதி உணர்த்திற்று. பெருமான் குமாரன் - பெருமானுக்குக் குமாரன்; கிருபாகரன் - இரக்க உணர்வே வடிவாயுள்ளவன்.

### கருத்து விளக்கம்:

பேறு எனப்படுவது அருட்பேறு ஒன்றேயாகலின், பொதுவாகப் 'பேறு' என்றே குறித்துச் சென்றார்.

(வரும்)

# ஆசிரியர் இளவழகனுர் அவர்கள் எழுதிய நூல்கள்

| | ரூ | அ |
|---|---|---|
| ஔவையார் திருவுள்ளம் | 0 | 12 |
| சிவப்பிரகாசர் செந்நெறி | 1 | 0 |
| அதிவீரராமர் அறநெறி | 0 | 10 |
| பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை | 2 | 8 |
| „ „ பொருளியல் வாழ்க்கை | 2 | 8 |
| நான்மணிக் கடிகை உரை | 0 | 8 |
| ஏலாதி „ | 0 | 8 |
| நீதி வெண்பா „ | 0 | 10 |
| முதுமொழிக் காஞ்சி „ | 0 | 10 |
| நீதிநெறி விளக்கம் „ | 0 | 10 |
| சங்கநூற் கட்டுரைகள் அல்லது பழந்தமிழர் நாகரிகம், 1ம் பாகம் | 1 | 2 |
| „ „ 2ம் „ | 1 | 14 |
| சங்க இலக்கிய இன்கவித் திரட்டு 1ம் பாகம் | 3 | 8 |
| „ „ 2ம் | 3 | 8 |
| „ „ 3ம் „ | 3 | 8 |
| ஜினேவா வீரன் | 0 | 8 |
| நாலடியார் பொழிப்புரை | 0 | 14 |
| „ விருத்தியுரை | 3 | 8 |
| தொல்காப்பியமூலம்,குறிப்புரை | 4 | 0 |
| சொல்லரசர் | 0 | 12 |
| அகத்திணையியல் விளக்கம் | 1 | 0 |
| கலித்தொகை நச்சினர்க்கினியர் உரையும்இளவழகனர்விளக்கமும் | 7 | 0 |
| உணவும் உருக்கமும் | 0 | 4 |
| பொதுமறை விளக்கம் [திருக்குறட் பாயிரஉரை] | 0 | 8 |
| இல்வாழ்க்கை (குறள் உரை) | 0 | 2 |
| திருவடிப்புகழ்ச்சி | 0 | 5 |
| ஒளிவழிபாடு | 0 | 4 |
| தணிகைமலை அல்லது அமைதி | 0 | 4 |
| குழந்தை யின்பம் | 0 | 3 |
| திருமூலர் அருள் மொழிகள் | 0 | 3 |
| இயற்கை வணக்கம் | 0 | 1½ |
| ஆத்திசூடி கருத்துரை | 0 | ¾ |
| ராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும் | 0 | 9 |
| அருட்பெருஞ்சோதி அகவல்விளக்கம் 1 | 0 | 2 |
| „ „ 2 | 0 | 2 |
| குருகுல இயக்கம் | 0 | 1 |
| விநாயகர் வழிபாடு, முருகர் வழிபாடு, வழிபாடும் தொண்டும், திருவள்ளுவரும் திருமூலரும், வேதவிநாயகர் கோவில் விளக்கங்கள் 1, 2, 3, உலகியலும் தவநெறியும் [தனித்தனி] | 0 | ½ |
| மூன்று உண்மைகள் | 0 | 3 |
| முல்லைப்பாட்டு அகராதி | 0 | 8 |
| திருமுருகாற்றுப்படை அகராதி | — | |
| திருக்கழுக்குன்ற மாட்சி | 0 | 2 |
| திருக்கழுக்குன்றப் பதிக விளக்கம் | 0 | 8 |
| ஆசிரியர் படம் | 0 | ½ |
| உலகுக்கு ஒருநூல் [அச்சில்] | | |
| இங்கிதமணவியல் (தமிழர் திருமணமுறை) | | |
| துடிசைக்கிழார் அ. சிதம்பரனர் | 0 | 4 |
| திருக்கழுக்குன்றப் பதிக இசைமுறை [குடந்தை. ப. சுந்தரேசனர்] | 1 | 0 |

புத்தகங்கள் எம்மிடம் கிடைக்கும். அஞ்சலில் பெறவிரும்புவோர், புத்தகங்களுக்குரிய தொகையும் அஞ்சல் செலவும் சேர்த்து அனுப்ப வேண்டும். 25% முன்பணம் அனுப்புவோர்க்கே புத்தகங்கள் V.P.P. யில் அனுப்பிவைக்கப்படும். ஒரே மொத்தமாக எல்லாப்புத்தகங்களும் ஆர்டர் அனுப்புவோர்க்கு அஞ்சல் செலவின்றி அனுப்பப் பெறும். பணம் அனுப்பவேண்டிய முகவரி:

குருகுலம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்சல்), செங்கற்பட்டு மாவட்டம், தமிழ்நாடு.

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: கி. சு. பாலசுந்தரம்.
குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்சல்), செங்கற்பட்டு மாவட்டம், தமிழ்நாடு.